
பக்கங்கள் 13+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 16 புதன்கிழமை 03.12.2025 | அதிர்வு 126

## கட்சிகளின் தலைவர்களுடன் ரணில் இன்று விசேட சந்திப்பு



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் இன்று மாலை 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# அனர்த்தச் சாவு எண்ணிக்கை 474 ஆக உயர்வு



இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் இதுவரை 474 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 356 பேர் காணாமல்போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இன்று காலை 10 மணி வரையான தகவல்களின்படி, நாடு முழுவதும் 4 இலட்சத்து 48 ஆயிரத்து 817 குடும்பங்களைச் சேர்ந்த 15 இலட்சத்து 86 ஆயிரத்து 329 பேர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்களால் கண்டி மாவட்டத்தில் 118 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 89 பேரும், 02

## விமலைக் கைது செய்ய பிடியாணை பிறப்பிப்பு!



முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச இன்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியமையால், அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள ஒரு வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதைத் தொடர்ந்து இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 02

# அனர்த்த உயிரிழப்பின் உண்மைத் தன்மையை மறைக்கின்றது அரசு!

## சுமந்திரன் பகிரங்கக் குற்றச்சாட்டு



(ந. லோகதயாளன்)

”இலங்கையில் அனர்த்தத்தால் ஏற்பட்ட சேதங்கள், உயிரிழப்புகள் தொடர்பான உண்மைத் தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். முழுப் பூசணிக் காயைச் சோற்றுக்குள் மறைக்கும் செயற்பாட்டை 03

# சில முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக இன்று அவசர அமைச்சரவைக் கூட்டம்



தேசிய மக்கள் சக்தி அரசின் விசேட அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இன்று நடைபெறுகின்றது.

இந்த அவசர அமைச்சரவைக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பமாகியுள்ளது என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் நாடு பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சில முக்கிய முடிவுகளை எடுப்பதற்காகவே இந்தக் கூட்டம் நடைபெறுகின்றது எனத் தெரிய வருகின்றது.






# அனர்த்தத்தால் 22 மாவட்டங்கள் பாதிப்பு அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவிப்பு

டித்வா சூறாவளியின் தாக்கத்தால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் பாதிக்கப்பட்ட நாட்டின் 22 நிர்வாக மாவட்டங்கள் தேசிய அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களாக அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மரணங்களைப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 9 ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பதிவாளர் நாயகம் சசிதேவி ஜலதீபனினால் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய கண்டி, நுவரெலியா, பதுளை, குருநாகல், மாத்தளை, கேகாலை, கம்பஹா, முல்லைத்தீவு, அனுராதபுரம்,



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka
EXTRAORDINARY

PART I : SECTION (I) — GENERAL

Government Notifications

REGISTRATION OF DEATHS (TEMPORARY PROVISIONS) ACT, No. 19 OF 2010

Declaration of National Disaster Affected Areas

1. Kandy Administrative District
2. Nuwara Eliya Administrative District
3. Badulla Administrative District
4. Kurunegala Administrative District
5. Matale Administrative District
6. Kegalle Administrative District
7. Gampaha Administrative District
8. Mullaitivu Administrative District
9. Anuradhapura Administrative District
10. Colombo Administrative District



11. Jaffna Administrative District
12. Polonnaruwa Administrative District
13. Mannar Administrative District
14. Puttalam Administrative District
15. Ratnapura Administrative District
16. Monaragala Administrative District
17. Batticaloa Administrative District
18. Ampara Administrative District
19. Trincomalee Administrative District
20. Kilinochchi Administrative District
21. Vavuniya Administrative District
22. Kalutara Administrative District

S. Jalatheepan,
Registrar General.

At the Registrar General's Department,
No. 234/3, Denzil Kobbekaduwa Mawatha,
Battaramulla,
02nd Day of December 2025.

EOG 12 - 0008

கொழும்பு, யாழ்ப்பாணம், பொலனறுவை, மன்னார், புத்தளம், இரத்தினபுரி, மொனராகலை, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கிளிநொச்சி, வவுனியா, களுத்துறை ஆகிய நிர்வாக மாவட்டங்களே தேசிய அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### விமலைக் கைது செய்ய...

ஜனாதிபதி செயலகத்தால் தேசிய சுதந்திர முன்னணிக்கு வழங்கப்பட்ட 40 அரச வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன் விளைவாக அரசாங்கத்துக்கு 9 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

### கட்சிகளின் தலைவர்களுடன்...

கொழும்பில் நடைபெறுகின்றது.

இயற்கை அனர்த்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நாட்டையும் மக்களையும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான வேலைத்திட்டம் மற்றும் அரசால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு எவ்வாறு ஒத்துழைப்பது, எதிரணிகளால் எப்படியான திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பன பற்றி ஆராயவே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன கருத்துத் தெரிவிக்கையில்,

“இந்த முறை ஏற்பட்டுள்ள அனர்த்தத்தால் வரலாற்றில் ஒருபோதும் இல்லாத அளவு பாதிப்பும் உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. அதனால் கடந்த காலங்களில் இவ்வாறான அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்த அனுபவமுள்ள தலைவர் என்ற வகையில், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் உடனடி நிவாரணங்கள் கிடைக்கச் செய்யும் நோக்கில் 16 அம்சங்கள் அடங்கிய கோரிக்கை ஒன்றை அரசுக்கு வழங்கி இருக்கின்றது.

பாதிக்கப்பட்ட மக்களை மீள இயல்பு நிலைக்குக் கொண்டுவர எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என ஆராயவே இன்று அனைத்து அரசியல் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்திருக்கிறார்.

இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்படும் ஆலோசனைகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.” - என்றார்.

### அனர்த்தச் சாவு...

பதுளை மாவட்டத்தில் 83 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 53 பேரும், புத்தளம் மற்றும் கேகாலை மாவட்டங்களில் தலா 29 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 28 பேரும் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 2 இலட்சத்து ஆயிரத்து 875 பேர்ளநாடு முழுவதும் உள்ள 1,385 நலன்புரி முகாங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.



# அனைத்துப் பிரதான வெள்ள அபாய எச்சரிக்கைகளும் இன்றுடன் நீக்கம்!

இலங்கையில் அமுலில் இருந்த அனைத்துப் பிரதான வெள்ள அபாய எச்சரிக்கைகளும் தற்போது நீக்கப்பட்டுள்ளன என்று நீர்ப்பாசனத் திணைக்களம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்தத் திணைக்களத்தின் அறிக்கையில், பிரதான ஆறுகளின் நீர் மட்டம் தொடர்ந்து குறைந்து வருகின்றது.

தற்போது எந்த ஆறும் பிரதான வெள்ள மட்டத்தில் இல்லை.

நாகலகம் வீதியில் உள்ள களனி ஆற்றில் மட்டுமே இன்னும் ஓர் எச்சரிக்கை மட்டம் காணப்படுகின்றது. இருப்பினும் அதன் நீர் மட்டம் குறைந்து வருகின்றது.

'டித்வா' புயலினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்குப் பிறகு, கடந்த 24 மணி நேரத்தில் அனைத்து கண்காணிக்கப்பட்ட நிலையங்களிலும் மழைவீழ்ச்சி மிகக் குறைந்த அளவுக்குச் சரிந்துள்ளது.

அத்துடன் ஹன்வெல்ல, கிளேன் கோர்ஸ் மற்றும் இரத்தினபுரி உட்பட பல முக்கிய இடங்களில் நீர் மட்டம் சாதாரண நிலைக்குத் திரும்பியுள்ளது.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகள் நடைபெற்று வருவதால், அதிகாரிகள் தொடர்ந்து ஆறுகளைக் கண்காணித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**அனர்த்த உயிரிழப்பின்...**

அரசாங்கம் முன்னெடுக்கக்கூடாது."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

"அரசாங்கத்துக்கு எதிராகப் பேசக்கூடாது என்ற தோரணையில் எவரும் எங்களை விமர்சிக்கக்கூடாது. உண்மை வெளிவந்தால்தான் நிவாரணப் பணிகளும் சரியான முறையில் நடைபெறும்."

– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"ஆழிப் பேரலை வந்தபோது அன்றைய அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து ஏற்படுத்திய கட்டமைப்பைத் தடுக்க நீதிமன்றப் படியேறிய ஜே.வி.பியினருடன் கூட இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றோம் என்றால் வேறு யாருடன் சேர்ந்து செயற்பட மாட்டோமா? எல்லோருடனும் சேர்ந்து செயற்படுவோம்." – என்றும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பகுதியில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்கும் பணிகள் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் "இராசமாணிக்கம் மக்கள் அமைப்பு" ஊடாக இந்த நிவாரணப் பொருட்கள் வழங்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதன் முதல் கட்டமாக களுவாஞ்சிக்குடிப் பகுதியில் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்ட சுமார் 1000 பேருக்கான நிவாரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் தலைமையில் களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டார்.

முதல் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிவாரண வேலைத்திட்டம் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன்,

"மலையகத்துக்கு நாம் விஜயம் செய்தபோது பல பரிதாபகரமான சம்பங்கள் தொடர்பில் அறிந்துகொண்டோம். சில இடங்களில் முழுக் கிராமங்களுமே புதையுண்ட நிலையில் காணப்படுகின்றன. அந்த நேரத்தில் வீடுகளில் இல்லாத சிலர் தப்பிப் பிழைத்துள்ளனர்.

அங்கிருந்த ஒருவர் தனது முழுக் குடும்பமுமே புதையுண்டுள்ளது எனவும், மீட்பு நடவடிக்கைகளுக்கு யாரும் வரவில்லை எனவும், மூன்று நாட்களாக எப்படியாவது தமது குடும்பத்தினரின் உடல்களை மீட்க வேண்டும் எனப் போராடி வருவதாகவும் தெரிவித்தார். அங்கு சிலர் தமது பணத்தைக் கொடுத்து இயந்திரங்களை எடுத்துத் தேடும் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் நிவாரணப் பணிகளில் அனைவரும் கட்சி பேதங்கள் கடந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அரசாங்கமும் சொல்கின்றது. நாங்களும் கூறுகின்றோம். அனைவரும் கூறுகின்றார்கள். ஆனால், இந்த விடயங்களில் ஏனைய கட்சிகளைப் புறந்தள்ளிவைப்பதில் அரசாங்கம் மும்முரமாகச் செயற்படுவது வெளிப்படையாகத் தெரிகின்றது.

நேற்று கண்டி மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்தபோது கம்பளைப் பகுதியில் 19 பேர் தான் உயிரிழந்துள்ளனர் என்று சொல்கின்றார். நாங்கள் சென்ற முதல் இடத்திலேயே 26 உடல்கள் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன.

இன்னும் 50 இற்கும் மேற்பட்டவர்கள் புதையுண்டுள்ளனர் என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். அவ்வாறு பல கிராமங்கள் பேரழிவுக்கு உள்ளாகியுள்ளன. அந்தப் பகுதிகளில் மக்கள் சென்று மீள வாழ முடியாத வகையில் அனர்த்தங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்று நாங்கள் சென்ற பதுளை மாவட்டம், நுவரேலியா மாவட்டங்களில் பாரிய இழப்புகள் ஏற்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது. அங்குள்ள மக்கள் எங்களைக் கண்டதும் கண்ணீருடன் தமது துயரங்களை – கஷ்டங்களைக் கூறினார்கள்.

அந்தப் பகுதிகளில் உடனடி நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்படாததை மக்கள் மூலம் அறியமுடிந்தது. இதனை நாங்கள் குறைகூற வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. அரசாங்கத்தைக் குறைகூறுவதற்காக இதனைச் சொல்லவில்லை. மக்களுக்கு உடனடி நிவாரணங்கள் சென்றடைய வேண்டும். மக்களின் உயிரிழப்புகள் எத்தனை என்பது தெளிவாகத் தெரிய வேண்டும். உண்மையை – முழுப்பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைக்க முடியாது.

நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்திருக்கின்றபோது முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு பத்து பதினைந்து பேர்தான் உயிரிழந்துள்ளார்கள் என அரசாங்கம் பதில் சொன்னால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தவேளையில் அரசாங்கத்துக்கு எதிராகப் பேசக் கூடாது என்ற தோரணையில் எவரும் எங்களை விமர்சிக்கக் கூடாது. உண்மை வெளிவந்தால்தான் நிவாரணப் பணிகளும் சரியான முறையில் நடைபெறும்.

ஆழிப் பேரலை வந்தபோது அன்றைய அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து ஏற்படுத்திய கட்டமைப்பைத் தடுக்க நீதிமன்றப் படியேறிய ஜே.வி.பியினருடன் கூட இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றோம் என்றால் வேறு யாருடன் சேர்ந்து செயற்பட மாட்டோமா? எல்லோருடனும் சேர்ந்து செயற்படுவோம்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீர்ச் சிக்கனம்

அண்மைக்கால பேரிடரினால் மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்ட பல்வேறு அத்தியாவசிய சேவைகளில் குடிதண்ணீர் விநியோகமும் ஒன்று.

பேரிடரை ஏற்படுத்தியது பெரு வெள்ளம். அதிகளவு தண்ணீர்தான். ஆனால் அது பல இடங்களிலும் ஏற்படுத்திய பற்றாக்குறைகளில் ஒன்று சுத்தமான குடிதண்ணீர் - பாவனைக்கு நல்ல தண்ணீர் - இல்லாத நெருக்கடி.

சுற்றிவர வெள்ளமென தண்ணீர் தேங்கி நின்றாலும் பாவனைக்கு உதவாத நிலைமை. அது பெருந் தொல்லையாக மாறி விட்ட நிலைமை. பல இடங்களிலும் மக்கள் தண்ணீர் இன்றி கண்ணீர் விடும் இக்கட்டு.

வடக்கிலும் கிழக்கிலும் பல வீடுகள் கிணறுகளைக் கொண்டிருந்தாலும் கூட, வெள்ளத்தில் மூழ்கிய அவற்றிலிருந்தும் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வது நெருக்கடிக்குள்ளாகி இருக்கின்றது.

நாடு முழுவதிலும் மோசமான வானிலை காரணமாக பல நீர் வழங்கல் அமைப்புகளின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது

கண்டி, புத்தளம், குருநாகல் மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள சில நீர் வழங்கல் அமைப்புகள் அதிகபட்ச கொள்ளளவில் இயங்காதமையால், தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பேரிடர் காரணமாக நாடு முழுவதும் இயங்கும் பல நீர் வழங்கல் அமைப்புகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என சபை ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் 343 நீர் வழங்கல் திட்டங்களை இயக்கும் நீர் வழங்கல் சபை, இந்த நீர் வழங்கல் திட்டங்களில் 156 தடைப்பட்டுள்ளன எனவும், இதனால் சபையால் வழங்கப்படும் தண்ணீரைப் பயன்படுத்தும் ஏராளமான நுகர்வோர் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

இருப்பினும், பாதிக்கப்பட்ட நீர் வழங்கல் அமைப்புகளில் 126 நேற்றுக் காலை நிலைவரப்படி மீட்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் 30 நீர் வழங்கல் அமைப்புகளை செயற்பாட்டு நிலைக்கு மீட்டெடுக்க நீர் வழங்கல் சபை ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். சபையின் ஓய்வுபெற்ற ஊழியர்களும் இதற்காக தன்னார்வத் தொண்டு செய்துள்ளனர் என்று சபை தெரிவித்துள்ளது.


மேலும், பல இடங்களில் நிலச்சரிவுகள் சாலைகளைத் தடுத்துள்ளன. நீர் விநியோகக் குழாய்கள் சேதமடைந்துள்ளன. மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது. நீர் பெற்றுக் கொள்ளும் இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மின் மற்றும் இயந்திர உபகரணங்கள் சேதமடைந்துள்ளன.

இவற்றின் காரணமாக நீர் வழங்கல் அமைப்புகளை முழுமையாக மீட்டெடுக்க பல நாள்கள் ஆகலாம் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், தலைநகர் உட்பட்ட மேல் மாகாணத்தில் இயங்கும் அனைத்து நீர் வழங்கல் அமைப்புகளும் தற்போது அதிகபட்ச திறனில் இயங்குகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அளவுக்கதிக மழைத் தண்ணீர் வெள்ளமென வந்ததால்தான் பேரிடர் நேர்ந்தது. ஆனால், அதனால் குடிதண்ணீருக்கு - பாவனைக்கான தூய நீருக்கு - பல இடங்களில் நெருக்கடி நிலவுகின்றது.

பேரிடரை ஒட்டி மற்றைய விடயங்களில் காட்டும் சிக்கனத்தை தூய நீர் வசதியிலும் பேணுவது முக்கியமாகும்.



# உயர்வுடைக் கார்த்திகைத் தீபத் திருநாள்!

(நாளை கார்த்திகைத் தீபத் திருநாள்)

கார்த்திகை தீபம் கதைகளைக் கொண்டது
கதைகளைக் கதையாய் எடுத்திடல் வேண்டாம்
கற்கண்டை மருந்தில் சேர்ப்பது போன்று
தத்துவம் விளக்கிடக் கதைகளைப் பகிர்ந்தார்

விளக்கு என்றால் விளக்கம் தருவது
வெளிச்சம் வந்தால் விளங்கிடும் அனைத்தும்
விளக்கை ஏற்றுதல் வெற்றியைக் கொடுக்கும்
விளக்கை ஏற்றுவார் அனைத்தையும் காணுவார்

கல்வியும் வேண்டும் செல்வமும் வேண்டும்
இரண்டும் இணைந்தால் இன்பமே ஆகும்
இணையும் வேளை இறுமாப்பு வந்தால்
இரண்டின் பயனும் இல்லாமற் போகும்

சரஸ்வதி நாயகன் பிரம்மா ஆவான்
லக்குமி நாயகன் திருமால் ஆவான்
கல்வியை செல்வத்தை வழங்கும் வல்லமை
பெற்றவர் இருவர் மோதினார் முறுகினார்

ஆணவம் கொண்ட மாலும் அயனும்
ஆண்டவன் தாமென நின்றிடு வேளை
அவர்களின் நடுவே பேரொளி ஒன்று
ஜோதிப் பிளம்பாய் ஜொலித்துமே நின்றது

ஜோதியைக் கண்டவர் பீதியில் நின்றனர்
அசரீரி ஒலித்தது அடிமுடி காணுங்கள்
கண்டால் கடவுள் கண்டவர் வென்றார்
இருவரும் தேடினார் எதையுமே காணா

ஆணவம் அவர்களை அடிதொழ வைத்தது
ஒளி வடிவாக இறைவன் தோன்றினார்
ஒளி வடிவாக வந்த நன்நாள்தான்
உயர்வுடைக் கார்த்திகைத் தீபத் திருநாள்

கந்தனின் தோற்றமும் ஒளியுடன் இணைந்தது
கனற் பொறியாகியே கந்தனும் தோன்றினான்
எந்தையாம் இறைவன் ஜோதியாய் எழுந்தார்
எழிலுடன் குமரனும் ஒளியென ஜொலித்தார்



கந்தனின் கோவிலில் கார்த்திகை தீபம்
விஷ்ணு கோவிலில் விஷ்ணுக்குத் தீபம்
சிவனார் கோவில் ஏனைய கோவில்
அனைத்தும் ஒளிர்வது சர்வாலய தீபம்

வீட்டிலும் தீபம் வெளியிலும் தீபம்
பார்க்கும் இடமெலாம் பரந்திடும் ஒளியே
ஒளியெனும் வெள்ளம் பரவியே நிற்கும்
உள்ளம் இறையின் எண்ணமே பரவும்

ஒளியாய் இறையைக் கண்டிடும் தத்துவம்
உயவுடைத் தத்துவம் உண்மைத் தத்துவம்
ஆதலால் அனைவரும் அனுதினம் தீபத்தை
வீட்டிலே ஏற்றி போற்றியே நிற்பார்

விளக்கை ஏற்றியே அனைத்தும் தொடங்குவோம்
விளக்கு ஏற்றினால் மங்கலம் என்போம்
மங்கலம் வழங்கிடும் வரமே விளக்கு
விளக்கின் ஒளியில் தெரிவான் இறைவன்

ஒளிவளர் விளக்கு இறைவனே ஆவார்
உயர்வுடை தத்துவம் இறைவனே ஆவார்
கார்த்திகை விளக்கு கசடினை அகற்றும்
கடவுளை நினைந்து ஏற்றுவோம் விளக்கை !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.





# புதிய சோனகதெரு கிராமத்துக்கு யாழ். மாநகர முதல்வர் விஜயம்!

## வெள்ளப் பாதிப்புகள் தொடர்பில் ஆய்வு



யாழ்ப்பாணம் 13 ஆம் வட்டாரம் புதிய சோனகதெரு கிராமத்தில் டித்வா புயலால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்த ராசா விசேட கள விஜயம் ஒன்றை நேற்று மேற்கொண்டிருந்தார்.

இதன்போது புதிய சோனகதெரு கிராமத்தில் முதலாம் குறுக்கு தெரு தொடக்கம் ஒன்பதாம் குறுக்கு வரையான பகுதிகளில் வடிகால் சீரற்ற நிலமை, வடிகால் பிரச்சினை காரணமாக வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் உள்ளது. இதனால் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து மக்கள் எதிர்கொண்ட அவல நிலை தொடர்பில் குடியிருப்பாளர்கள், பாதிக்கப்பட்ட மக்களிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

இதன்போது கருத்து வெளியிட்ட மாநகரசபை உறுப்பினர் அப்துல்லா, இந்தப் பிரதேசத்தில் 185 குடும்பங்கள் வசிப்பதாகவும், முறையான திட்டமிடல் இன்றி அமைக்கப்பட்ட வடிகால் அமைப்பால் மழை நீர் முறையான ஓட்டமின்றி குடியிருப்புக்களை நோக்கி செல்வதாகவும், வடிகாலமைப்பைத் திருத்தி முறையான திட்டமிடலுடன் கூடிய வடிகாலமைப்பை புதிதாக சீரமைக்க வேண்டும் என்று முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

புதிய சோனகதெரு வாழ் மக்களும் தாம் வருடா வருடம் மழை வெள்ளத்தின் போது எதிர்கொள்ளும் சவால்களை நேரடியாக முதல்வரிடம் பட்டியலிட்டனர். இதன் போது மாநகரசபை உறுப்பினர்களான கௌரவ ஆர்.எப்.றிஸ்லா மற்றும் கௌரவ எம்.றொயிஸ் அவர்களும் இப் பகுதிவாழ் மக்களின் அவலங்களை முதல்வருக்கு தெளிவுபடுத்தினர்.

மக்கள் குறிப்பிட்ட வடிகால் பிரச்சினைகளையும், வெள்ளப்பாதிப்புக்களையும் அவதானித்த முதல்வர் கருத்து வெளியிடுகையில் இந்தக் கிராமத்துக்கான முறையான வடிகாலமைப்பு தொடர்பில் மாநகர பொறியியலாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் சகிதம் மதிப்பீடு ஒன்றை செய்து 13 ஆம் மற்றும் 11 ஆம் வட்டாரங்களின் துறைசார் அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடி புதிய வடிகால் திட்டத்தை முறையான திட்டமிடலுடன் அமைக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

முதல்வரின் மேற்படி கள விஜயத்தில் மராமத்துக்குழு தலைவர் ஜே.மயூரன், மாநகர சபை உறுப்பினர்களான என்.எம்.அப்துல்லா, எம்.றொயிஸ், ஆர்.எப்றிஸ்லா, கிருஸ்ணகுமார், யாழ். முஸ்லிம் சமூக செயற்பாட்டாளர்களான எம்.டீ.எம்.இர்பான், ஐ.எல்.நிம்ரூஸ், எஸ்.சசான், பாலச்சந்திரன் மைக்கல் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# மலையகம் நோக்கிய நிவாரணப் பணிக்கு உதவிகளை வாரி வழங்கும் மட்டு. மக்கள்!

(பழுவூரான்)

இலங்கை வரலாற்றில் இதுவரை ஏற்படாத பேரழிவை சந்தித்திருக்கும் மலையக மக்கள் புயல் மற்றும் மழை வெள்ளத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டு, உயிரிழப்புக்களையும் சந்தித்துள்ளனர்.

அந்த மக்களின் துயர் துடைக்கும் பணிக்காக நிவாரணங்களை சேகரித்து அனுப்பும் பணிகளில் மட்டக்களப்பு மாநகர சபை உள்ளிட்ட அனைத்து உள்ளூராட்சி சபைகள், வர்த்தக சங்கங்கள், பொது அமைப்புகள், பொது அமைப்புகள் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு வழங்குவதற்கான நிவாரணப் பொருள்களைச் சேகரிக்கும் பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கடந்த இரண்டு நாள்களாக ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச சபையும் ஏறாவூர்ப்பற்று வர்த்தக சங்கமும் இணைந்து முன்னெடுத்துவரும் நிவாரணம் சேகரிக்கும் பணிக்காக ஏறாவூர்ப் பற்று வர்த்தக சங்கம் ஊடாக நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள் தங்களது நிவாரண உதவிகளை வழங்கியிருந்தனர்.

செங்கலடி பொதுச் சந்தைக்கு முன்பாக அமைக்கப்பட்ட நிவாரணம் சேகரிக்கும் நிலையம் மற்றும் வியாபார நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று நிவாரணங்களை சேகரிக்கும் பணிகளில் வர்த்தக சங்கத்தினர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலரும் ஈடுபட்டிருந்தனர்.

வரலாற்றில் இதுவரை ஏற்படாத பேரழிவை சந்தித்திருக்கும் மலையக மக்களுக்கு எம்மால் முடிந்தளவு உதவிகளை வழங்க அனைவரும் கைகோர்த்து செயற்பட முன்வாருமாறு ஏறாவூர் பற்று பிரதேச சபை மற்றும் ஏறாவூர் பற்று வர்த்தக சங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர், உணவு வழங்கும் கடற்படை

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் வழங்குவதற்காக கடற்படை முழுத் தீவையும் உள்ளடக்கும் வகையில் ஒரு சிறப்பு திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது.

இதன் கீழ், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சுத்தமான குடி தண்ணீர் மற்றும் சமைத்த உணவை வழங்குவதற்காக கடற்படையின் நடமாடும் சமையலறை மற்றும் நடமாடும் மீள் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு மற்றும் கண்டி பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ளன.

அதன்படி, மீதொடமுல்ல, ஆரச்சிகட்டுவ மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவை வழங்குவதற்காக ஒரு நடமாடும் சமையலறை நிறுவப்பட்டுள்ளது.

அதேவேளை, கடற்படையின் நடமாடும் மீள் நீர் சுத்திகரிப்பு



நிலையமானது கண்டி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீர் விநியோகம் தடைபட்ட பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளது.



### இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தால்

# 4 கிலோவுக்கும் அதிகமான 'ஐஸ்' பேருவளையில் கைப்பற்றப்பட்டது

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குக் கிடைத்த விசேட தகவலின் அடிப்படையில், நேற்று செவ்வாய்க்கிழமை பேருவளை, கலங்கரை விளக்கத் தீவில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, புதருக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 கிலோ 260 கிராம் 'ஐஸ்' போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட 'ஐஸ்' போதை ப்பொருளின் சந்தைப் பெறுமதி 68 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களை மேலதிக விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காகக் கொழும்பு போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.







# சந்நிதியான் ஆச்சிரமத்தால் சத்துணவுப் பொருள் வழங்கல்

சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக பிரிவையுடைய, தொண்டைமானாறு தெற்கு கிராம சேவையாளர் பிரிவு, கெருடாவில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவு,

கெருடாவில் தெற்கு கிராம சேவையாளர் பிரிவு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 26 குடும்பங்களை சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

சோளம், கடலை, உழுந்து, பயறு, கௌப்பி, சீனி, அரிசி உள்ளடங்கலான பொருள்கள் வழங்கப்பட்டன.

ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் இன்று புதன்கிழமை காலை 9.45 மணிக்கு ஆச்சிரமத்தில் வைத்து வழங்கினார்.

மாதாந்தம் இந்த உதவித்திட்டம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# தெஹியத்தகண்டிய சிங்கள மக்களுக்கு காரைதீவிலிருந்து உலருணவுப்பொதிகள்!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் காட்டாற்று வெள்ளத்தால் முற்றாகத் தனிமைப்படுத்தப்பட்ட தெஹியத்தகண்டிய சிங்கள மக்களுக்கு காரைதீவிலிருந்து உலருணவுப் பொதிகள் திங்கட்கிழமை விநியோகிக்கப்பட்டன.

காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். ஜி.பி. ஜயரத்ன தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் இணைந்து இந்த நிவாரணப் பொருள்களை மிகவும் துரிதமாகச் சேகரித்தனர்.



காரைதீவு பொலிஸ் பிரிவில் வசிக்கும் ஏ.சிவகுமார் (லண்டன்), கே.சந்திரகாந்தன், எம்.காண்டீபன், கே.நமச்சிவாயம், எம்.நௌசார் ஆகியோர் வழங்கிய இரண்டு லட்சம் ரூபா நிதியுதவியில் இந்த உலருணவு நிவாரணப் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தின் பதில் பொலிஸ் அதிகாரி, உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.பி.ஜி.சம்பத்குமார விக்ரம் ரத்ன மற்றும் அக்கரைப்பற்று பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.தந்தநாராயண ஆகியோரின் ஆலோசனையின் பேரில் இந்த நிவாரண பொருள்கள் சேகரிக்கப்பட்டன.

இந்த உலருணவு நிவாரணப் பொருள்கள் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்கிரம மற்றும் தெஹியத்தகண்டிய பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன் ஊடாக அகதி முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்பட்டன.

# மின்சாரமின்மையால் மின்சார வேலியை தாண்டி ஊர்மனைகளுக்குள் யானைகள் பெரும் அடாவடி!





(வி.ரி.சகாதேவராஜா)

சமகால பேரிடர் காலத்தில் அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் உமிரிப் பகுதியில் யானைகள் பெரும் அட்டகாசம் செய்து வருகின்றன.

மின்சாரம் இல்லாத நிலையில் யானைகள் மின்சார வேலியைத் தாண்டி நூற்றுக்கணக்கான தென்னம்பிள்ளைகளை அழித்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது. இதனால் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

யானைகளால் மின்சார வேலிகளும் ஏனைய கொங்கிறீட் தூண் வேலிகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

தென்னந்தோட்ட உரிமையாளர்கள் நேற்று அங்கு சென்று பார்வையிட்ட போது அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் மற்றும் அம்பாறை மாவட்ட அரசா அதிபரின் கவனத்துக்கு இந்த யானைகளின் அட்டகாசங்கள் பற்றிய முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த பகுதியில் இரவானதும் மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர்.





# அம்பாறை, மட்டு. மாவட்டங்களில் 4 தினங்களில் மின்சாரம் சீராகும்?

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தடைப்பட்ட பகுதிகளுக்கு இன்னும் 4 தினங்களில் மின் இணைப்பை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான வேலைத் திட்டங்கள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை, மஹியங்கனை மற்றும் வவுணதீவு ஆகிய வலயங்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்கத் தேவையான கோபுரத்தை அமைக்கும் பணியில் இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் தற்போது இரவு, பகல் பாராமல் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாகக் குறித்த கோபுரம் முற்றாக சேதமடைந்துள்ளது.

இதனால் அம்பாறை, மஹியங்கனை மற்றும் வவுணதீவு ஆகிய வலயங்களுக்கான மின்சாரம் கடந்த ஏழு நாள்களாக தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரன்தம்மே, மஹியங்கனை 132 கே. வி. உயர் மின்னழுத்த இணைப்பின்,



15 ஆவது கோபுரமே இதுவாகும்.

இலங்கை மின்சார சபையின், 132 கே. வி. உயர் மின்னழுத்த மின் பரிமாற்ற கோபுரம் மற்றும் மின் கம்பிகள் வெள்ளத்தால் சேதமடைந்ததால், அம்பாறை மற்றும் கல்முனை பகுதிகளில் மின் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை, சிரமங்களுக்கு மத்தியில் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு, சேதமடைந்த மின் பரிமாற்ற பாதையைச் சரிசெய்து, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின் விநியோகத்தைச் சீர்செய்யும் பணிகளைத் துரித கதியில் முன்னெடுத்துள்ளது.

தற்போது அம்பாறை மற்றும் கல்முனை பகுதிகளில் அத்தியாவசிய நிறுவனங்களுக்கான மின் விநியோகம் சீர்செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் சில பகுதிகளுக்கு தற்காலிகமாக சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படுகிறது. இருப்பினும், சில பகுதிகளில் தொடர்ந்து முழுமையான மின் தடை நிலவுகிறது.

சேதமடைந்த கோபுரத்துக்குப் பதிலாகப் புதிய கோபுரம் ஒன்றின் கட்டுமானம் துரித கதியில் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்தப் பணிகளை நிறைவுசெய்து, அம்பாறை மற்றும் கல்முனை பகுதிகளுக்கான மின் விநியோகத்தை நான்கு நாள்களில் முழுமையாக சீர்செய்ய எதிர்பார்க்கப்படுகிறது என்று தரிவிக்கப்பட்டுள்ளது.





# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் வழங்கல்

(பூ.லின்ரன்)

கடந்த சில நாள்களுக்கு முன் இலங்கை முழுவதும் இயற்கை அனர்த்தத்தால் பல பிரதேசங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அரச சார்பற்ற மற்றும் அரச சார்பான நிறுவனங்கள் பல உதவிகள் அனர்த்த காலத்திலும் அனர்த்தம் ஓய்வு நிலையை அடைந்த பின்னரும் தொடர்ந்து செய்து வருகின்றன.

அந்த வகையில் நேற்று வடமராட்சி கிழக்கில் அதிகம் பாதிக்கப்பட்ட குடும்பங்களைத் தெரிவு செய்து வடமராட்சி கிழக்கு இளைஞர்களின் ஏற்பாட்டில் தனியார் ஒருவரான யகத் துஷியா என்பவரின் நிதி அனுசரணையில் 40 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.



# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இறந்த மாடுகள் கரை ஒதுங்கின!

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் சௌத்பார் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கிய மாடுகளை மன்னார் நகர சபை மீட்டு புதைத்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்ட நிலையில் ஆயிரக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன. இந்த நிலையில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட ஒரு தொகுதி மாடுகள் கடலில் விடப்பட்ட நிலையில் குறித்த கால்நடைகள் உயிரிழந்த நிலையில் சௌத்பார் கடற்கரையில் நேற்று செவ்வாய்க் கிழமை மாலை கரையொதுங்கியன.

இந்த நிலையில் அப்பகுதியில் துர்நாற்றம் வீசிய நிலையில் மன்னார் நகர சபையின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இந்த நிலையில் மன்னார் நகர சபையின் தலைவர் டானியல் வசந்தன் குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டதோடு, நகர சபை பணியாளர்களின் உதவியுடன் கரையொதுங்கிய மாடுகள் மீட்கப்பட்டு கடற்கரை பகுதியில் பாரிய பள்ளம் தோண்டப்பட்டு உயிரிழந்த மாடுகள் புதைக்கப்பட்டன.




# சென்னையில் கொட்டித் தீர்த்த மழை; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

டித்வா புயல் வலுவிழந்தாலும் சென்னை அருகே கரையை கடப்பதன் காரணமாக, சென்னை, புறநகரில் மழை கொட்டித்தீர்த்தது. இதனால், பல இடங்களில் மழை நீர் சூழ்ந்து, வெள்ளக் காடானது. இதனால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.



வங்கக்கடல் மற்றும் அதையொட்டிய வடதமிழகம், புதுச்சேரிகடலோரப் பகுதியில் நிலை கொண்டிருந்த டித்வா புயல் கடந்த 30 ஆம் திகதி வலுவிழந்து, ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலமாக மாறியது. இது நேற்று அடுத்தடுத்து வலுவிழந்து காற்றமுத்த தாழ்வு பகுதியாக சென்னை அருகே நிலைகொண்டிருந்தது.

இது, சென்னை அருகே கரையை கடப்பதன் காரணமாக, சென்னை மற்றும் புறநகரில் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் முதல் நேற்று இரவு வரை மிதமான மழை முதல் கனமழை வரை விட்டுவிட்டு பெய்தது.

குறிப்பாக, சென்னை அண்ணா சாலை, மெரினா, சாந்தோம், மயிலாப்பூர், எம்.ஆர்.சி. நகர், வேளச்சேரி, பட்டாளம் உள்பட பல்வேறு இடங்களில் நேற்று மழை பெய்தது.

இதனால், பல்வேறு இடங்களில் மழை நீர் தேங்கியது. வேளச்சேரி, பட்டாளம் பகுதிகளில் உள்ள முக்கிய சாலைகளில் தண்ணீர் தேங்கியது. வியாசர்பாடி கணேசபுரத்தில் உள்ள சுரங்கப்பாதையில் தண்ணீர் தேங்கியது. இதனால், அந்தவழியாக போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது.

கொரட்டூர் ஓம்சக்தி நகரில் தாழ்வான பகுதியில் மழை நீர்சூழ்ந்தது. கொரட்டூர் வாட்டர் கேனல் சாலை, பெரம்பூர் பிரதான சாலையில் முழுமையாக தண்ணீர் தேங்கி காணப்பட்டது. இங்கும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதுபோல, இங்குள்ள பேருந்து நிலையம், பாரதி நகரில் மழை நீர் சூழ்ந்திருந்தது.

கோடம்பாக்கம் ரங்கராஜபுரம் பாலத்தில் அப்பகுதி மக்கள் தங்கள் கார்களை எடுத்து வந்து நிறுத்தினர். இதுபோல, வேளச்சேரி, ராயபுரம் பகுதியிலும் பலர் தங்கள் கார்களை பாலங்களில் நிறுத்தினர். மெரினா கடற்கரை சர்வீஸ் சாலையில் மழை நீர் தேங்கியது. மணற்பரப்பில் தண்ணீர் தேங்கி குளம் போல் காட்சி அளித்தது.

இதனால், கடற்கரைக்கு செல்ல 3 ஆவது நாளாக நேற்றும் தடைவிதிக்கப்பட்டது. தி.நகரில் உள்ள சாலைகளில் மழை நீர் வெள்ளம்போல் ஓடியது.

கோடம்பாக்கம், வடபழனி, ஆற்காடு சாலை, பவர் ஹவுஸில் பல இடங்களில் மழை நீர் தேங்கியது. மழை காரணமாக, தாம்பரம் ஜி.எஸ்.டி. சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

திருவொற்றியூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அதிகாலை முதல் விட்டு விட்டு மழை பெய்தது. இதனால். மக்கள் வீட்டை விட்டு வெளியே வரமுடியாமல் முடங்கினர். செங்குன்றம் குமரன் நகர் பகுதியில் 100 இற்கும் மேற்பட்ட வீடுகளை மழை வெள்ளம் சூழ்ந்தது.

இதனால், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பாதிக்கப்பட்டனர். மழை நீர் தேங்கிய இடங்களில் மாநகராட்சி ஊழியர்கள், தண்ணீரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டனர்.

தொடர்மழையால், மக்களின் இயல்பு வாழ்க்கை முழுமையாக பாதிக்கப்பட்டது.

# காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்க வருமாறு ஸ்டாலினுக்கு மத்திய அமைச்சர் அழைப்பு



காசி தமிழ் சங்கமத்தில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய கல்வி அமைச்சகம் சார்பில், காசி மற்றும் தமிழகத்தின் பண்பாடு, ஆன்மிகம் மற்றும் வரலாற்றுத் தொடர்புகளின் நிகழ்ச்சிகளைப் பிரதிபலிக்கும் வகையில் காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சி ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியை சென்னை ஐ.ஐ.டி. மற்றும் பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் (பி.எச்.யு) ஆகியவை இணைந்து நடத்துகின்றன. இதன் தொடர்ச்சியாக 'தமிழ் கற்கலாம்' எனும் கருப்பொருளில் இந்த ஆண்டுக்கான 'காசி தமிழ் சங்கமம் 4.0' நிகழ்ச்சி வாராணசியில் நேற்று தொடங்கியது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரையான இந்த விழாவில் பல்வேறு தலைப்புகளில் அமர்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த விழாவில் மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் உரையாற்றுகையில்,

"தமிழகத்தில் மொழியை வைத்து வேற்றுமையை உருவாக்கி வருகிறார்கள். குறுகிய அரசியல் எண்ணத்துடன், அரசியல் லாபத்துக்காக இதை செய்கின்றனர். ஆண்டுதோறும் காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்கும்படி முதல்வர் ஸ்டாலினுக்கு கடிதம் எழுதுகிறேன்.

இம்முறை மீண்டும் அவரை அழைக்கிறேன். காசிக்கு வந்து பாருங்கள். தமிழகத்துக்கும், காசிக்கும் உள்ள நீண்டகால தொடர்பு உங்களுக்கு தெரியவரும். அதை நாங்கள் எவ்வாறு கொண்டாடுகிறோம் என்பதை அறிய முடியும். எங்களிடம் மொழிப் பாகுபாடு இல்லை.

சுயநல சக்திகள்தான் அதை உள்நோக்கத்துடன் பயன்படுத்துகின்றனர். அரசியலில் வேண்டுமெனிலும் இத்தகைய செயல்பாடுகள் வெற்றி பெறலாம். ஆனால், மக்களிடம் நன்மதிப்பை பெற முடியாது. இந்த நிகழ்ச்சி மூலமாக தமிழகத்துக்கும், காசி இடையே அறிவுப் பாலத்தை உருவாக்கியுள்ளோம்.

பன்மொழி கலாச்சாரம் நம் நாட்டின் பலமாகும். ஆங்கிலேய மோகத்தில் இருந்து வெளியேற மொழிதான் முக்கிய காரணியாக இருந்தது. அதனால், தாய்மொழி மட்டுமல்ல, இந்திய மொழிகள் அனைத்தையும், அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். அதன்படி, உத்தரப் பிரதேச மக்களுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன." என்று தெரிவித்துள்ளார்.



# ஆப்கானில் 80 ஆயிரம் பேர் முன்னிலையில் சிறுவன் நிகழ்த்திய பழிக்குப் பழி கொலை

ஆப்கானிஸ்தானில் 80 ஆயிரம் பேர் திரண்டிருந்த ஒரு மைதானத்தில் 13 வயது சிறுவன் ஒருவன் தனது குடும்பத்தினர் 13 பேரை கொலை செய்த நபரை சுட்டுக் கொன்ற சம்பவம் சர்வதேச அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் கோஸ்ட் மாகாணத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது. ஆப்கன் உச்ச நீதிமன்றம் அண்மையில் இந்த தண்டனையை நிறைவேற்ற அனுமதியளித்திருந்தது. அதனையடுத்து தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட நபர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 குழந்தைகள், ஒரு பெண் உள்பட 13 பேரை 10 மாதங்களுக்கு முன்னர் கொலை செய்தார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு.

இந்நிலையில் பழிக்குப் பழி கொலையை 13 வயது சிறுவனை வைத்து நிறைவேற்றியது சர்வதேச அரங்கில் கண்டனத்தை ஈர்த்துள்ளது. ஐ.நா சபையின் ஆப்கனுக்கான சிறப்பு கண்காணிப்பாளர், ரிச்சர்ட் பென்னட், இந்தச் சம்பவம் மனிதநேயமற்ற, கொடூரம் என்று கண்டித்துள்ளார். சர்வதேச சட்டத்துக்கு புறம்பானது எனத் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பான காணொலி காட்சியில் விளையாட்டு மைதானத்தில் பாதிக்கப்பட்டவரின் உறவினர் உள்பட 80 ஆயிரம் பேர் திரண்டிருந்தனர். அப்போது குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட நபர் மைதானத்தின் மையத்தில் அமர வைக்கப்பட்டு அவர் மீது ஐந்து முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அவர் மண்ணில் சரிந்து விழுந்ததும், குழுமியிருந்த மக்கள் மத கோஷங்களை எழுப்பினர்.

தண்டனை நிறைவேற்றத்துக்கு முன்னர், துப்பாக்கியுடன் காத்திருந்த சிறுவனிடம் மன்னிப்பு வழங்க விரும்புகிறாயா என்று கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால் அந்தச் சிறுவன் இல்லை என்று சொல்ல துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. சிறுவன் தன் கையிலிருந்த துப்பாக்கியால் 5 ஆவது குண்டை சுட்டு தண்டனையை நிறைவேற்றியுள்ளார்.

# 2030 இற்குள் உலகப் போர்: எலான் மஸ்கின் கணிப்பு



2030 ஆம் ஆண்டுக்குள் உலகப் போர் நடக்கும் என தொழிலதிபரும், எக்ஸ் தளத்தின் உரிமையாளருமான எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய மோதல் குறித்து எக்ஸ் சமூகவலைத்தளத்தில் ஹண்டர் ஆஷ் என்ற பயனர் ஒருவர் பதிவு ஒன்றை வெளியிட்டு இருந்தார்.

அந்த பதிவில், "போர் அச்சுறுத்தல்கள் இல்லாததால் உலகெங்கிலும் உள்ள அரசுகள் செயலற்றுப் போயுள்ளன. எனவே நிர்வாகத்தில் அவற்றின் செயல்திறன் குறைந்துள்ளது" என ஹண்டர் ஆஷ் கூறியிருந்தார்.

இதற்கு எலான் மஸ்க், "போர் நிச்சயம் நடக்கும். எப்போது என்று நீங்கள் கேட்கலாம். எனது கணிப்புப்படி 2030ஆம் ஆண்டுக்குள் நடக்கும். போர் தவிர்க்க முடியாதது. இன்னும் 5 ஆண்டுகளில் நடக்கும். அதிகபட்சமாக 10 ஆண்டுகளில் அது நடக்கும்." என்று குறிப்பிட்டுள்ளார்..

இருப்பினும், எலான் மஸ்க் தனது கருத்தை விரிவாகக் கூறவில்லை.

இதனால் எக்ஸ் பயனர்கள் மத்தியில் விரைவில் என்ன நடக்கக்கூடும் என்று எதிர்பார்ப்பைக் கிளப்பி உள்ளது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

புதன்கிழமை 03/12/2025

## பாதுகாப்புத் திட்டத்தில் கனடா இணைவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல் அளித்துள்ளது



C3



# கனடாவில் காட்டுத் தீ அபாயம் விஞ்ஞானிகள் கடும் எச்சரிக்கை

கனடா, இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் மிகவும் பின்தங்கியுள்ளதாக புதிய ஆய்வு எச்சரிக்கிறது.

யூகோன் பிராந்தியத்தில் உள்ள 'Tintina Fault' எனப்படும் பிளவு கோடு, 12,000 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் செயல்படும் அறிகுறிகளை காட்டுகிறது.

இது பெரிய நிலநடுக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் கனடா வரலாற்றிலேயே அதிகமான காட்டுத்தீ பாதிப்பை சந்தித்தது. இதனால், ஒட்டாவா, ரொறன்ரோ, மான்ட்ரியல் போன்ற நகரங்களில் காற்றுத் தரம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

C2

# பழமையான இந்திய உணவகத்தை வாங்குகின்றது கனேடிய நிறுவனம்






பிரித்தானியாவின் பழமையான இந்திய உணவகம் ஒன்றை மூட கட்டட உரிமையாளர்கள் முடிவு செய்ததைத் தொடர்ந்து அந்நிறுவன உரிமையாளர்கள் நீதிமன்றத்தை நாடியுள்ளார்கள்.

இந்நிலையில், அந்த உணவகத்தை கனேடிய நிறுவனம் ஒன்று வாங்கி விரிவாக்கம் செய்ய முடிவு செய்துள்ளது.

லண்டனிலுள்ள Regent Street என்னும் பிரபலமான தெருவில் அமைந்துள்ள Victory House என்னும்

C2



# துப்பாக்கியைத் திரும்பப் பெறும் திட்டத்திலிருந்து பின்வாங்கும் ஆல்பர்ட்டா மாகாண அரசாங்கம்





கனடாவின் ஆல்பர்ட்டா மாகாண முதல்வர்தனியெல்லே ஸ்மித், ஒட்டாவாவின் துப்பாக்கி திரும்பப் பெறும் திட்டத்தைத் தள்ளி வைக்கும் ஒரு தீர்மானத்தை தனது அரசாங்கம் அறிமுகப்படுத்தும் என்று கூறியுள்ளார்.

வார இறுதியில் நடைபெற்ற கன்சர்வேடிவ் கட்சியின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஸ்மித் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்

இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால், மாகாணம், மத்தியரசின் விதிகளின் கீழ் மக்களை அமுல்படுத்துவதையோ அல்லது வழக்குத் தொடர்வதையோ இது மறுக்கும்.

இந்த அமைப்புகள் தங்கள் வீடுகளையும் குடும்பங்களையும் ஊடுருவும் நபர்களிடமிருந்து பாதுகாக்கும் ஆல்பர்ட்டா மக்களை கட்டாயப்படுத்தவோ அல்லது வழக்குத் தொடரவோ மாட்டாது என்பதை இறையாண்மைச் சட்டத் தீர்மானம் தெளிவுபடுத்தும், என்று ஆண்டு பொதுக் கூட்டத்தில் ஸ்மித் மேலும் கூறினார்.

சட்டப்பூர்வமான துப்பாக்கி வைத்திருப்பவர்கள் பிரச்சினை இல்லை. அதனால்தான் எங்கள் நிலைப்பாட்டை ஒட்டாவா மற்றும் சாஸ்காட்செவானில் உள்ள எங்கள் நண்பர்கள் உட்பட பிற மாகாணங்களும் ஆதரவு தெரிவிக்கின்றனர் என்று பொதுப் பாதுகாப்பு மற்றும் அவசர சேவைகள் அமைச்சர் மைக் எல்லிஸ் கூறினார்.

அதேவேளை துப்பாக்கி திரும்ப வாங்கும் திட்டத்தில் எங்களிடம் உள்ள வரையறுக்கப்பட்ட பொலிஸ் வளங்களைப் பயன்படுத்துவதில் நாங்கள் ஆர்வம் காட்டவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---

## கனடாவில் காட்டுத் தீ...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த கோடையில், புகைமூட்டம் காரணமாக வெளிப்புற நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டன, பலரின் நுரையீரல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டது.

ஒரு ஆய்வில், கனடாவில் உள்ள வீடுகளில் 25 சதவீத குடும்பங்கள் மட்டுமே வானிலை சார்ந்த அவசர நிலைக்கு முன்னெச்சரிக்கை எடுத்துள்ளதாக தெரியவந்தது.

பெரும்பாலானோர், பேரிடர் தயார் நிலையை அரசு அல்லது மீட்பு படையினரின் பொறுப்பாகவே கருதுகின்றனர்.

நகரங்கள் பழைய வெள்ள அபாய வரைபடங்களைப் பயன்படுத்துகின்றன. பள்ளிகள் காற்றோட்டம், காற்றுத் தரம் மேம்படுத்தும் அடிப்படை மாற்றங்களை புறக்கணிக்கின்றன. போக்குவரத்து அமைப்புகள் பழைய உள்கட்டமைப்பில் இயங்குகின்றன.

சைபர் பாதுகாப்பு அமைப்புகள், நீர், மின்சாரம் போன்ற முக்கிய கட்டுப்பாட்டு அமைப்புகள் மீது வெளிநாட்டு தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் ப்ரோடி ராமின் , "பேரிடர்கள் திடீரென நிகழ்வதில்லை, அவை பல ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்ட எச்சரிக்கைகளின் விளைவுகள். கனடா, தடுப்பு மனப்பாங்கு கொண்டு செயல்பட வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

---

## பழமையான...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டிடத்தில் வீராஸ்வாமி உணவகம் என்னும் இந்திய உணவகம் அமைந்துள்ளது.

இந்நிலையில், சுமார் 100 ஆண்டுகளாக லண்டனின் அடையாளங்களில் ஒன்றாக மாறிப்போன வீராஸ்வாமி உணவகம் அமைந்துள்ள கட்டிடத்தை அலுவலகமாக மாற்ற அதன் உரிமையாளரான Crown Estate என்னும் அமைப்பு முடிவு செய்துள்ளது.

உணவகத்துக்கு Crown Estate மாற்று இடம் தருவதாக கூறியுள்ளது என்றாலும், பாரம்பரியத்தை எப்படி இடம் மாற்ற முடியும் என பிரபல பிரித்தானிய ஹொட்டல் துறை நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

ஆக, இந்த விடயம் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில், Fairfax Financial Holdings Limited என்னும் கனேடிய நிறுவனம் அந்த உணவகத்தை வாங்கி விரிவாக்கம் செய்ய முடிவு செய்துள்ளது.

உண்மையில், வீராஸ்வாமி உணவகம், சட்னி மேரி, அமயா என்னும் மூன்று உணவகங்களும் ஆறு நுயவ டுவன என்னும் நிறுவனத்துக்கு சொந்தமானவை.

ஆறு Eat Ltd நிறுவனத்தை நிறுவியவர்கள் நமிதா பஞ்சாபி மற்றும் ரஞ்சித் மத்ரானி என்னும் இந்திய வம்சாவளி தம்பதியர்.

குறிப்பிடத்தக்க மற்றொரு விடயம் என்னவென்றால், தற்போது ஆறு Eat Ltd வாங்கும் குயசைகயஒ என்னும் கனேடிய நிறுவனத்தின் உரிமையாளரும் இந்திய வம்சாவளியினர்தான்.

அவரது பெயர் ப்ரேம் வத்சா. ஆக, உணவகத் துறையில் ஏற்கனவே அனுபவமும், இந்தியப் பின்னணியும் இருப்பதால், வீராஸ்வாமி உணவகம் முதலானவற்றை ப்ரேம் வாங்கி விரிவாக்கம் செய்ய இருப்பது ஆறு நுயவ டுவன நிறுவனத்தின் வளர்ச்சியாகவே கருதப்படுகிறது.

ஆறு நுயவ டுவன நிறுவனத்தை ப்ரேம் வாங்கினாலும், அதை நிறுவிய நமிதா பஞ்சாபி மற்றும் ரஞ்சித் மத்ரானி தம்பதியரும், ரஞ்சித்தின் சகோதரியான கமேலியா பஞ்சாபியும் Fairfax நிறுவனத்துடன் இணைந்தே பணியாற்ற உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# பாதுகாப்புத் திட்டத்தில் கனடா இணைவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல் அளித்துள்ளது



ஐரோப்பிய ஒன்றியமும் கனடாவும் திங்களன்று Ottawaவை 150 பில்லியன் யூரோக்கள் மதிப்புள்ள ஐரோப்பிய பாதுகாப்பு நிதி திட்டமான SAFEஇல் சேர அனுமதிக்கும் ஒப்பந்தத்தை அறிவித்தன.

இந்த புவிசார் அரசியல் ரீதியான கொந்தளிப்பான காலங்களில், குறுகிய கால அவசரம் மற்றும் நீண்ட கால தேவைகளை நாங்கள் நிவர்த்தி செய்வதால், ஒத்துழைப்பை அதிகரிக்கவும், பாதுகாப்பு இலக்குகளை அடையவும், சிறப்பாகச் செலவிடவும் இது (SAFE) xU வழிமுறையாகும், என்று ஐரோப்பிய ஆணையத் தலைவர் Ursula von der Leyen மற்றும் கனேடிய பிரதமர் மார்க் கார்னி ஆகியோர் ஒரு கூட்டறிக்கையில் தெரிவித்தனர்.

இந்த திட்டத்தில் பங்கேற்க கனடாவுக்கு உரிமை அளிக்கும் ஒப்பந்தத்தை அவர்கள் வரவேற்றனர், இது எங்கள் ஆழமான ஒத்துழைப்பின் அடுத்த படியாகும், மேலும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடாவிற்கு இடையில் பகிரப்பட்ட முன்னுரிமைகளின் அடையாளமாகும் என்றும் அழைத்தனர்.

உலகளாவிய பாதுகாப்பிற்கான ஒரு முக்கியமான நேரத்தில், எங்கள் தொழில்களுக்கு இடையே நெகிழ்ச்சியான பாதுகாப்பு விநியோகச் சங்கிலிகளை ஒன்றாக உருவாக்குவோம் எனவும் அவர்கள் கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பாவிற்கான பாதுகாப்பு நடவடிக்கை திட்டமான SAFE, பங்கேற்கும் அங்கத்துவ நாடுகளுக்கு ஏனைய கூட்டாளர்களுடன் இணைந்து ஆயுதங்களை வாங்குவதற்கு சாதகமான விதிமுறைகளில் கடன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

SAFEஇன் கீழ் கூட்டு ஆயுதத் திட்டங்கள் அவற்றின் கூறுகளில் குறைந்தபட்சம் 65 சதவீதத்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 உறுப்பு நாடுகளுக்குள் தயாரிக்க வேண்டும், ஆனால் கனடா போன்ற கூட்டணி நாடுகளுக்கு விலக்கு அளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம் ரஷ்யாவிலிருந்து அதிகரித்து வரும் இராணுவ அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் அதன் பாதுகாப்புத் துறையை வலுப்படுத்தவும், ஐரோப்பாவிலிருந்து அமெரிக்கா விலகுவதைத் தவிர்க்கவும் முயற்சிக்கின்றமை புலனாகிறது.